**பனை அபிவிருத்தி சபை - 2019**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பனை அபிவிருத்தி சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின்ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

| இல | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் படி கொடுக்கல் வாங்கல்,ஏனைய நிகழ்வு அல்லது நிபந்தனை குறிப்பாக பொருந்தக்கூடியதாக இல்லாத நிலையில் முகாமை அத்தகைய | நாங்கள் 2018 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றை தயாரிக்கின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தனித்துவமான |

| | | | |
|---|---|---|---|
| | சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை உருவாக்கிப் பயன்படுத்தலாம். மற்றும் அத்தகைய கொள்கைகள் நிதிநிலைக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், அந்த விடயங்களைப் பின்பற்றாமல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் (ஜிஏஏபி) மற்றும் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இரண்டுமே சபையினுடைய நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பிரயோகிக்கப்பட்டதாக எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் ஐ விட ஜிஏஏபி இன் கீழ் உள்ளடக்கிய பரப்புக்களை குறிப்பிடாது நிதிக்கூற்றுக்களில் கூறப்பட்டது நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோரை தவறாக வழிநடத்துகின்றது. | இவ்வருடம் முதல் முகாமையின் அனுமதியுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவோம். | அடிப்படையினை பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமைப்பை கடைப்பிடிக்காது நிதிநிலைமைக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | முகாமை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. பரிந்துரைக்கப்பட்ட நியமங்களின் படி இவ்வருடத்திலிருந்து கூற்று சபை மற்றும் அமைச்சின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்தப்படும். | நிதிக் கூற்றுக்களின் வடிவம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 உடன் இணங்குதல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இற்கமைய முழுமையாக தேய்விடப்பட்ட ஆனால் தற்போதும் பயன்படுத்தப்படும் ரூபா. 5.5 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் பற்றிய வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் உருவாக்கப்படவில்லை. அத்துடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய அந்த சொத்துக்களின் பயன்தருகாலத்தின் மதிப்பீட்டுப் பிழைகள் சரிசெய்யப்படவில்லை | முகாமை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வருட கூற்றிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நியமங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் . | சொத்துக்கள் கணக்கிடப்பட வேண்டும் அத்துடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் தேவைக்கமைய நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இற்கமைய சபையானது அதன் செலவுகளை இயல்பாக வகைப்படுத்தியிருந்த போதிலும் ரூபா.43,557,310 பெறுமதியான தேய்மான செலவுகள் நிதிசெயலாற்றல் கூற்றில் தனித்தனியாக காட்டப்படுவதற்கு பதிலாக நிர்வாகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | முகாமை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வருட கூற்றிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நியமங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 க்கமைவாக மீண்டெழும் செலவு வகைப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் பணிக்கொடைச் செலவுக்கான ஏற்பாடாக ரூபா.4,139,196நிதிசெயல்திறன் கூற்றில் காட்டப்படுவதற்கு பதிலாக உண்மையாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா. 8,021,635பெறுமதியான பணிக்கொடை மீளாய்வாண்டின் செலவாக கணக்கிடப்பட்டுள்ளது. பணிக்கொடை ஏற்பாடு மற்றும் உண்மையான பணிக்கொடை கொடுப்பனவிற்கிடையிலான வேறுபாடு ரூபா.3,882,439 பிற வருமானமாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் பணிக்கொடைச் செலவு மற்றும் பிற வருமானம் என்பன ரூபா. 3,882,439 ஆல் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது. | முகாமை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வருட கூற்றிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நியமங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும். | பணிக்கொடை ஏற்பாட்டிற்குரிய சீராக்கங்கள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கீட்டு தத்துவங்களுக்கமை வாக கணக்குகளில் உருவாக்கப்பட வேண்டும். |
| (இ) | கட்டிடம் நிர்மாணிப்பதற்காக கட்டிட திணைக்களத்திற்கு ரூபா. 25 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் இறுதியில் சான்றழிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா.11.45 மில்லியன். எவ்வாறாயினும் முழுக் கொடுப்பனவும் தனித்தனியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை மற்றும் முற்கொடுப்பனவு பெறுகைகளாக கணக்கிடுவதற்கு பதிலாக மூலதனமாக்கப்பட்டுள்ளது. | மேலும் தாமதமின்றி மற்றும் சரியான நேரத்தில் மதிப்பீட்டு செலவுக்குள் கட்டிட வேலைகளை விரைவுபடுத்த முகாமை கட்டிட திணைக்களத்திற்கு கடுமையாக அறிவுறுத்தியுள்ளது. | சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைக்கமைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா.18,322,925 பெறுமதியான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகளின் பதிவழிப்பு நிதிசெயற்பாட்டு கூற்றில் செலவாக காட்டப்படுவதற்கு பதிலாக மூலதனம் மற்றும் பொறுப்புக்களிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அந்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | நிதி உதவித்திட்டத்தின் பதிவழிப்பு ஏற்கனவே செலவழிக்கப்பட்டதால் நிதிக்கூற்றுக்களில் எந்தவித குறைவையும் ஏற்படுத்தாது. | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செலவுகள் கணக்கிடுவதற்கான கொள்கையை கட்டாயம் கொண்டிருக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வருடங்களுக்கு மேலாக நிலுவையாக இருக்கும் 13 கடன்பெறுனர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவையின் திரட்டிய தொகை ரூபா.5,116,689 தொடர்பில் சபையால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் 15 கடன்பெறுனர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் ரூபா.5,211,023 தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் சபையினால் பெறப்படவில்லை. | காலத்துக்கு காலம் கடிதங்கள் அனுப்பப்பட்டன. சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் மேலதிக நடவடிக்கைக்காக சட்ட ஆலோசகரிடம் சமர்ப்பிக்கப்படும். திக்கம் வடிசாலை மீள ஆரம்பிக்கப்படும் போது ரூபா.1,609,453 நிலுவையினை முகாமை அவர்களிடமிருந்து அறவிடும். | உரிய நேரத்தில் நிலுவைத் தொகையை அறவிட தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிலுவைத்தொகையாக உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா. 600,780 செலுத்தவேண்டிய தொகை கடந்த 5 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாதுள்ளது. | குறித்த நிறுவனம் கொடுப்பனவுக்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் பிற பொருத்தமான இரசாயனங்கள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. இதனால் முகாமை மேற்குறித்த நிறுவனத்திற்கு ரூபா. 600,780 கொடுப்பனவு செய்யவில்லை. | நிலவுகின்ற பொறுப்புக்களை அடையாளம் காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொறுப்புக்கள் இல்லாதவிடத்து அத்தொகையானது பதிவழிக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | முத்திரை வரிச்சட்டம் (சிறப்பு ஏற்பாடு) இல.12.2006 அத்துடன் (திருத்தம்) சட்ட இல.10 2008 | ரூபா.25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து முத்திரை வரியானது அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் சட்டத்திற்கு அமைவாக அறவிடப்படாததுடன் இறைவரித்திணைக்களத்திற்கும் அனுப்பவில்லை. | நாங்கள் முத்திரைவரி தொடர்பான மேற்குறித்த அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். என் அறிவுக்கு எட்டிய வகையில் வழங்குனர்கள் அனைவரும் நிதிப்பிரிவின் காசாளரிடமிருந்து காசோலையை பெற்றுக் கொள்ளும் போது ரூபா.25 பெறுமதியான முத்திரையை வழங்கியுள்ளார்கள்.ஆனால் எமது காசாளர் உறுதிச்சீட்டில் முத்திரையை இணைக்கவில்லை. | முத்திரை வரிச்சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |
| **(ஆ)** | **சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 2015 வைகாசி 25 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல.பிஈடி 2/2015 | 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிக்கு சபையின் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் பற்றுச்சீட்டுக்கு தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு பதிலாக உச்சபட்ச தொடர்பாடல் படி ரூபா.7,001,632 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நாங்கள் சம்பளத்துடன் தொடர்பாடல் கொடுப்பனவு செய்யப்படுவதை நிறுத்தியுள்ளோம். அத்துடன் 2020ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் பற்றுச்சீட்டுக்களின் அடிப்படையில் மட்டும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) | 2003 ஆனி 02ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல.பீஈடி/12 இன் 6.5 ஆம் பிரிவு | (i) 2019 ஆம் ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் 146 நாட்கள் காலதாமதத்துடன 2020 ஆடி 24ஆம் திகதியன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எங்களது சபை புதிதாக கணக்கியல் தொகுப்பினை கடந்த வருடம் (கார்த்திகை 2019) கொள்வனவு செய்துள்ளது. எங்களது அனைத்துக் கணனிகளிலும் இந்த தொகுப்பு முறைமை (கட்டமைப்பு அபிவிருத்தி) இற்றைப்படுத்தப்படுகின்றது அத்துடன் எங்களுடைய அலுவலர்களுக்கு பாவனை தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்டமையால் சிறிது காலம் எடுத்தது. நாங்கள் தலைமைக் | அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காரியாலயம் மற்றும் மாவட்ட நிலையங்களின் முழு கையேட்டு தரவுகளையும் பதிவேற்றினோம். இதனால் நிதிக்கூற்றுக்கள் சிறிது காலதாமதமாக சமர்ப்பிக்கப்பட்டது. | |
| | | (ii) 2016,2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்குரிய சபையின் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட வில்லை. | நாங்கள் கொரோனா ஊரடங்கை எதிர்கொண்டோம். அத்துடன் வேலைகளுக்கான ஊழியரது வரவுகள் மீதான கட்டுப்பாடுகளும் அறிக்கைகளை தயாரிக்கும் வழமையான செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தியது. முகாமை பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கைகளை அட்டவணைப்படுத்த உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. | |
| (iii) | 2005 ஆடி 01 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல.பீஈடி/31 | ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிலும் குறைந்தது ஒவ்வொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் முதலாவது மற்றும் முன்றாவது காலாண்டுகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டம் நடாத்தப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் பனை அபிவிருத்தி சபையின் உள்ளக கணக்காய்வினால் 04 முகாமைத்துவக்குழு கூட்டம் நடாத்தப்பட்டது. மீளாய்வாண்டில் 03 கூட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்ட போதிலும் சபையின் குழு உறுப்பினர்களின் நியமனம் காரணமாக எங்களால் கூட்டத்தை நடாத்த முடியவில்லை. | அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (iv) | 2010 பங்குனி 30 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.34(ii) | மீளாய்வாண்டில் ரூபா. 453,542 பெறுமதியான பிரயாண இணைந்த படிகள் சபையின் அலுவலகர்களுக்கு சுற்றுநிருபத்திற்கு எதிராக மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | திணைக்கள சுற்றறிக்கைக்கு அமைய நாங்கள் பிரயாணப்படி கணித்து உறுதிச்சீட்டுகளுக்கானகொடுப்பனவு செய்கின்றோம். உங்களுடைய அவதானிப்புக்களுக்கமைய நாங்கள் எங்களது பிழையான கணிப்பு மற்றும் கொடுப்பனவை ஏற்றுக்கொள்கின்றோம். இவ்வாண்டிலிருந்து நாங்கள் முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் இல. 34(ii) இனை | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பின்பற்றுவோம். அத்துடன் நாங்கள் கடந்த வருட மேலதிக கொடுப்பனவை கணித்து பொறுப்பான அலுவலரிடமிருந்து மிகவிரைவில் அறவிடுவோம். | |
| (v) | 2006 தை 25 ஆம் திகதிய தேசிய பெறுகை முகவர் சுற்றறிக்கை இல. 08 இன் 4.2 ஆம் பிரிவு | பிரதான பெறுகைத்திட்டம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சு மற்றும் பொது முயற்சி திணைக்களத்திற்கு உரிய நேரத்தில் கையளிக்கப்பட்ட. எனினும் நாங்கள் சரியான நேரத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கவில்லை. எதிர்காலத்தில் நாங்கள் பெறுகை வழிகாட்டி சுற்றுநிருபம் 2016 பிரிவு 4.2 இற்கு அமைய கணக்காய்வுக்கு வழங்குவோம். | பெறுகை வழிகாட்டி மற்றும் தேசிய பெறுகை முகவர் சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| **(இ)** | **ஆட்சேர்ப்புத் திட்டம்** | | | |
| | பனை அபிவிருத்தி சபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் (எஸ்ஓஆர்) பிரிவு 4.4 | சபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு (எஸ்ஓஆர்) முரணாக வினைத்திறமைகாண் தடை பரீட்சைகளை பூர்த்தி செய்யாது எட்டு முகாமையாளர்கள் அவர்களின் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தனர். | 2019 ஆம் ஆண்டில் பனை அபிவிருத்தி சபை மற்றும் உரிய அமைச்சு அறிவிக்கப்பட்டு தேவையான அனுமதியுடன் பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டதுடன், அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பரீட்சைகள் நடாத்தப்பட்டது மற்றும் உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்களுடன் மதிப்பீட்டு அறிக்கை வேறாக வழங்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை மற்றும் தொடர்புடைய அமைச்சின் அனுமதியுடன் உயர்மட்ட முகாமைக்கான பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டது. | ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சபையின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 79,121,048 தொகையான பற்றாக்குறை ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 75,896,207 தொகை ஆகும். அதன்படி,நிதி விளைவுகளில்ரூபா 3,224,841 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.மீளாய்வாண்டில் ரூபா 7,028,890 தொகையால் நிர்வாக, விற்பனை, விநியோக மற்றும் உற்பத்தி செலவினம் அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐந்து மாதிரி பண்ணைகளுக்கு நிர்வாக மற்றும் ஸ்தாபன செலவுகள் மொத்தம் ரூபா 5,370,311 வருமானம் ஈட்டப்படாமல் 1 முதல் 9 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் தொடர்ந்து ஏற்பட்டுள்ளது. மேலும், நெடுந்தீவு மாதிரி பண்ணை 9 ஆண்டுகளுக்கு மேலாக வருமானம் ஏதும் ஈட்டப்படாமல் ரூபா 1,132,746 செலவினம் ஏற்பட்டு பராமரிக்கப்பட்டிருந்தது. | புதிய குறுங்கால வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளையும் மீள்நடுகையையும் அறிமுகப்படுத்தியுள்ளதோடு பண்ணை பராமரிப்பிற்காக முகாமைத்துவம் ஒரு நிரந்தர ஊழியரை நியமித்துள்ளது.ஆரம்ப கட்டத்தில் நாங்கள் எமது திறனுடன் அபிவிருத்தி செய்ய திட்டமிட்டு செலவு செய்தோம். நாங்கள் பனை மரங்களை முன்னைய வருடத்தில் நாட்டினோம். தற்போது எந்தவொரு செலவுகளும் மேற்கொள்ளவில்லை. ஆனால் இந்த மாதிரி பண்ணை இன்னும் பனை அபிவிருத்தி சபையின் கீழ் உள்ளது. | இலாபத்தை அதிகரிப்பதற்காக செயற்பாடுகளின் வினைத்திறனை முன்னேற்ற பொருத்தமான உத்திகளை வடிவமைத்து அமுல்ப்படுத்த வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நீர் சுத்திகரிப்பு பொறி ஒன்று (ஆர்ஓ) 25 நவம்பர் 2016 அன்று ரூபா 2,914,560 கிரயத்தில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், இதுவரை எந்தவொரு செயற்பாட்டிற்கும் அப்பொறி பயன்படுத்தப்படாது இருப்பதோடு 4 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாடின்றி காணப்பட்டுள்ளது. | உற்பத்தி நடவடிக்கையில் செயற்பாட்டு செயல்விளக்கம் நிகழ்த்தப்பட்டது. அக்காலகட்டத்தில் இப்பொறி பழுதடைந்துவிட்டது. ஓர் பாரிய திருத்தம் செய்யவென வழங்குனர்கள் பரிந்துரைத்தனர். எனவே, சபையின் அனுமதியுடன் மேற்குறிப்பிட்ட பொறியினை திருத்தத்திற்காக உரிய நிறுவனத்திற்கு இடமாற்றினோம். ஆர்ஓ பொறி எமது உத்தியோகபூர்வ மற்றும் உற்பத்தி ஆராய்ச்சி நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும். இப்பொறி கைதடியில் உள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாட்டு மட்டத்தில் ஒரு மாதத்திற்குள் மீண்டும் நிறுவப்படும். | குறித்த நோக்கத்திற்காக பொறியை பயன்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டு மொத்தம் ரூபா 25 மில்லியன் செப்ரம்பர் 2018 இல் கைதடியில் பனைசார் பாடசாலைக்கு இரண்டு மாடிக்கட்டிடம் அமைப்பதற்கு சபையினால் கட்டட திணைக்களத்திற்கு (மத்திய) விடுவிக்கப்பட்டிருந்ததோடு, 12 மார்ச் | மேலும் தாமதமின்றி மற்றும் காலம் தவறாது மதிப்பீட்டு கிரயத்துக்குள் கட்டட வேலைகளை விரைவுபடுத்த கட்டட திணைக்களத்திற்கு முகாமைத்துவம் கண்டிப்பாக தெரிவித்துள்ளது. | கட்டுமான வேலைகள் திட்டமிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். |

2019 இல் கட்டுமானங்களை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் கூட்டுமொத்தம் ரூபா 11.24 மில்லியன் அல்லது செலுத்தப்பட்ட தொகையில் 45 சதவீதம் மட்டுமே 2020 அக்டோபர் இறுதிவரையில் பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 முறையற்ற கொடுப்பனவு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து எந்தவொரு அனுமதியும் பெறப்படாமல் உத்தியோகத்தர்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா 649,467 மொழிக்கொடுப்பனவுகள் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட மொழிக்கொடுப்பனவுகள் பொது நிர்வாக சுற்றறிக்கை இல 29/98 இன் பிரகாரம் மற்றும் பனை அபிவிருத்தி சபையின் உரிய உத்தியோகத்தர்களின் தகுதிகளின் படி செலுத்தப்படுகின்றன. எப்படியிருப்பினும் உங்களால் கூறப்பட்டதன்படி சபையின் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட அதிகாரத்திடமிருந்து அனுமதி பெற தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். அக்டோபர் 2020 முதல் அனுமதி பெறும் வரை தொடர்புடைய கொடுப்பனவை நாங்கள் நிறுத்துகின்றோம். | அத்தகைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பயிற்றுனர் பதவியின் 2 மேலதிக ஆளணிக்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் பல்வேறு வகையான 22 பதவி வெற்றிடங்களை நிரப்ப பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தலைவரின் வேண்டுகோளின்படி 2018 ஆம் ஆண்டில் புதிய நியமனங்கள் உள்ளகமாக கணக்காய்வு செய்யப்பட்டது.தற்போதுள்ள ஆளணியும் நிரப்புதலுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்ட ஆளணியுடன் இணங்க வேண்டும். |

### 3.6 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டிலிருந்து வரிசை அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு சொந்தமான 7 வாகனங்களை சபை பயன்படுத்தியிருப்பினும், உரிமை மாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் | இந்த பிரச்சினையை நாங்கள் இனங்கண்டுள்ளதுடன் அனைத்து வாகனங்களையும் எமது சபையின் கீழ் மாற்ற ஒப்புக்கொள்கின்றோம். இப்போதுவரை சில நடவடிக்கைகள் எடுத்துள்ளதுடன், பொருத்தமான நடவடிக்கைக்காக தொடர்புடைய | மோட்டார் வாகனங்களின் உரிமையை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சிடம் கூடிய விரைவில் தொடர்புகொள்கின்றோம். | |

**3.7 தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆட்சேர்ப்புத் திட்டம் 15 மே 2009 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும் சபையின் முகாமைத்துவம் உள்ளகமாக பதவியுயர்த்தும் காலத்தில் ஆட்சேர்ப்புத்திட்டத்தினை கவனத்தில் கொள்ளவில்லை. | பெரும்பாலான உத்தியோகத்தர்கள் எஸ்ஓஆர் அனுமதிக்கு முன்னர் நியமிக்கப்பட்டவர்கள் (15 மே 2009). முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடனான கலந்துரையாடலின் படி தகைமையற்ற உத்தியோகத்தர்களின் விபரம் நியாயப்படுத்தல்களுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக நாங்கள் சமர்ப்பித்துள்ளோம். | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நடைமுறைகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டிலிருந்து முகாமைத்துவ சேவைதிணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் தேவைப்பாட்டிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ஒரு நபர் பிரதி பொது முகாமையாளர் பதவிக்கு சபையினால் பதவியுயர்த்தப்பட்டிருந்தார். விபரங்கள் பின்வருமாறு.<br>- பதவியுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர் பனை அபிவிருத்தி சபையின் எந்தவொரு பிரிவிலும் தரம் 1 இன் முகாமையாளர் பதவியில் உறுதிப்படுத்தப்படவில்லை.<br>- குறைந்தபட்ச தேவையான தரம் 1 இல் 5 வருட திருப்திகரமான சேவையினை அந்த உத்தியோகத்தர் பதவியுயர்வின் போது பூர்த்தி செய்யவில்லை.<br>- முன்னைய பதவியின் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையினை இந்த உத்தியோகத்தர் சித்தியெய்தவில்லை. | 10 செப்ரெம்பர் 2020 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் பிரகாரம் பனை அபிவிருத்தி சபையின் (பிடிபி) பிரதி பொது முகாமையாளர் (டிஜிஎம்) தெரிவிற்காக 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற நேர்முகத்தேர்வு இரத்துச் செய்யப்பட்டது. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நடைமுறைகளுடன் இணங்க வேண்டும |
| (இ) | கனிஷ்ட முகாமையாளர் வகையிலுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள் உற்பத்தி முகாமையாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு மேற்கூறப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முரணாக பதவியுயர்த்தப்பட்டிருந்தார்கள். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 10 செப்ரெம்பர் 2020 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் பிரகாரம் பனை அபிவிருத்தி சபையின் (பிடிபி) பிரதி பொது முகாமையாளர் (டிஜிஎம்) தெரிவிற்காக 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற நேர்முகத்தேர்வு இரத்துச் செய்யப்பட்டது. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நடைமுறைகளுடன் இணங்க வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | பதவியுயர்வின் போது,<br>- இரண்டு உத்தியோகத்தர்களும் அவர்களின் முன்னைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>- இரண்டு உத்தியோகத்தர்களும் கனிஷ்ட மட்ட பதவியின் முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடையவில்லை.<br>- இரண்டு உத்தியோகத்தர்களும் கனிஷ்ட முகாமையாளர் தரம் IIபதவியிலிருந்து கனிஷ்ட முகாமையாளர் தரம் I பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டிருக்கவில்லை.<br>- எஸ்ஓஆர் இன் பிரகாரம் சபையின் அந்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க மிகக்குறைந்த அனுபவத் தேவையான 15 வருட சேவையை இரண்டு உத்தியோகத்தர்களும் செய்திருக்கவில்லை.<br>- அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்தின் பிரகாரம் பதவியுயர்வுக்கு தேவையான மிகக்குறைந்த தேவைப்பாட்டை இரண்டு உத்தியோகத்தர்களும் திருப்திகரமாக முழுமையாக பூர்த்தி செய்திருக்கவில்லை. | | |
| (ஈ) | ஆளணி சேர்ப்புத்திட்டத்திற்கான அனுமதியை பெற்றுக்கொண்ட போதிலும் முகாமையினால் அடையாளப்படுத்தப்பட்ட சம்பள முரண்பாடுகளின் சீராக்கங்கள் செய்யப்படவில்லை. | முகாமையின் கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நடைமுறைகளுடன் இணங்க வேண்டும் |
| (உ) | சபையின் உள்ளக கணக்காய்வாளர் அனுமதி எதுவும் பெற்றுக் கொள்ளாது ஊவாவெல்லச பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்துகொண்டிருந்ததுடன் சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் சபையில் நிரந்தர வேலைக்கான சம்பளத்திற்கு மேலதிகமாக ஊவாவெல்லச பல்கலைக்கழகத்திலிருந்து ரூபா.600,000 சம்பளத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். | புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற சபையின் இயக்குனர்களது கூட்டத்திற்கமைவாக பனை அபிவிருத்தி சபையின் முன்னாள் டிஜிஎம் திரு.இ.ராமேஸ்வரன் இற்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணையை நடாத்துவதற்காக கட்டாய விடுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். | விசாரணையை முடிவு செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |
| (ஊ) | மேலும் சபையின் உள்ளக கணக்காய்வாளரால் மோசடியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன | புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற சபையின் இயக்குனர்களது | விசாரணையை முடிவு செய்ய உடனடி |

| | | | |
|---|---|---|---|
| | என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஊவாவெல்லச பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளராக பணிபுரியும் காலத்தில் ரூபா. 72,000 (அண்ணளவாக) பிரயாணப்படியாக சபையிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார். | கூட்டத்திற்கமைவாக பனை அபிவிருத்தி சபையின் முன்னாள் டிஜிஎம் திரு.இ.ராமேஸ்வரன் இற்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணையை நடாத்துவதற்காக கட்டாய விடுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். | நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |
| (எ) | சபையின் ஆளணி சேர்ப்புத்திட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட வரையறைக்கு மேலதிகமாக எட்டு முகாமையாளர்களுக்கு ரூபா.4,280,600 சம்பள உயர்வாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | அமைச்சின் விசாரணைக்குழு உரிய முகாமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைத்துள்ளது. இருப்பினும் முகாமையாளர்கள் அமைச்சின் செயலாளரிடம் மேன்முறையிட்டார்கள் மற்றும் மேன்முறையீட்டுக்குழு அமைச்சு விசாரணைக்குழுவின் தீர்மானங்களையே பரிந்துரைத்துள்ளது. எவ்வாறாயினும் நாங்கள் தற்போதைய அமைச்சின் செயலாளரிடமிருந்தான சரியான வழிகாட்டுதல்களுக்காக காத்திருக்கின்றோம். | மேலதிக கொடுப்பனவுகளை அறவிட உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |
| (ஏ) | மேலும் முகாமைத்துவ சேவைத்திணைக்கள ஆளணி சேர்ப்புத்திட்டத்தின் அனுமதி பெற்றிருந்த போதிலும் சபையினால் தயாரிக்கப்பட்ட சம்பள உயர்வுகளின் மேலதிக கொடுப்பனவின் அடிப்படையில் மேற்குறித்த எட்டு முகாமையாளர்கள் தொடர்பில் ரூபா.627,577 ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பிழையாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | அமைச்சு விசாரணைக்குழு உரிய முகாமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைத்துள்ளது. இருப்பினும் முகாமையாளர்கள் அமைச்சின் செயலாளரிடம் மேன்முறையிட்டார்கள் மற்றும் மேன்முறையீட்டுக்குழு அமைச்சு விசாரணைக்குழுவின் தீர்மானங்களையே பரிந்துரைத்துள்ளது. எவ்வாறாயினும் நாங்கள் தற்போதைய அமைச்சின் செயலாளரிடமிருந்தான சரியான வழிகாட்டுதல்களுக்காக காத்திருக்கின்றோம். | மேலதிக கொடுப்பனவுகளை அறவிட உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |